சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

# கணக்கீடு – 33 தரம் - 12

## Covid – 19 இடர் விடுமுறைகால பயிற்சி - 6

### தேர்ச்சி – 02 : கணக்கீட்டு சமன்பாடு (மீட்டல்)


வாரம் - 6 தயாரிப்பு : சஜித்.sp

இரத்தினபுரி தமிழ் தேசிய கல்லூரி BBA(Financial Spl), University of Colombo


01.03.2021 இல் மோரிசான் தனது வீட்டின் ஒரு பகுதியில் ரூபா 150 000 ஐ காசாக முதலிட்டு எழுதுகருவிகள் வியாபாரத்தை ஆரம்பித்தார். மேலும் இத்தினத்தில் அவர் வியாபாரத்தின் பாவனைக்காக ரூபா 60 000 பெறுமதியான தளபாடங்களையும் கொண்டு வந்தார். முதல் மாத வியாபாரச் செயற்பாட்டினால் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் ஏற்பட்டன.

| கொ.வா இலக்கம் | கொடுக்கல் வாங்கல்கள் |
|---|---|
| 01 | ரூபா 100 000 இற்கு எழுதுகருவிகள் கொள்வனவு செய்யப்பட்டது. |
| 02 | ரூபா 70 000 கிரயம் கொண்ட எழுதுகருவிகள் ரூபா 100 000 இற்கு காசுக்கு விற்கப்பட்டது. |
| 03 | எழுதுகருவிகள் ரூபா 150 000 இற்கு கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டன. |
| 04 | ரூபா 30 000 பெறுமதியான எழுதுகருவிகள் பழுதடைந்து காணப்பட்டதால் வழங்குனருக்கு திருப்பி அனுப்பப்பட்டது. |
| 05 | ரூபா 100 000 கிரயமான எழுதுகருவிகள் ரூபா 150 000 இற்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது. |
| 06 | அலுவலக உதவியாளருக்கு மாதாந்த சம்பளமாக ரூபா 20 000 செலுத்தப்பட்டது. |
| 07 | 15.03.2021 இல் கணனியொன்று ரூபா 120 000 இற்கு கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது. இத்தொகை 24 மாதங்களில் செலுத்தப்படல் வேண்டும். |
| 08 | மோரிசான் தனது சொந்த தேவைக்கு வியாபாரத்திலிருந்து ரூபா 25 000 ஐப் பெற்றுக் கொண்டார். |
| 09 | எழுதுகருவிகள் வழங்குனருக்கு செலுத்த வேண்டிய தொகைகள் 5% கழிவு அனுமதிக்கப்பட்டு தீர்க்கப்பட்டன. |
| 10 | வியபார வருமதியான தொகைகள் 5% கழிவு அனுமதிக்கப்பட்டு பெறப்பட்டன. |
| 11 | மோரிசான் தனது அமயச்செலவிற்கான கொடுப்பனவாக ரூபா 25 000 சம்பளத்தினை நிறுவனத்திலிருந்து எடுத்தார். |
| 12 | ரூபா 8000 கிரயமான எழுதுகருவிகள் பாடசாலை ஒன்றிற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. |

**மேலதிக தகவல்கள் :**

- 2021 மாரச் மாதத்திற்குரிய ரூபா 3 000 தொகைக்கான வியாபாரத்தின் மின்கட்டணப் பட்டியல் 02.04.2021 இல் பெறப்பட்டது.
- வியாபாரத்தின் ஆதனம், பொறி மற்றும் உபரணங்களுக்கு நேர்க்கோட்டு முறையில் கிரயத்தில் 20% வருடாந்தம் பெறுமானத்தேய்விடப்படல் வேண்டும்.

**வேண்டப்படுவது:**

(01) இலக்கம் 01 தொடக்கம் 10 வரையிலான மேற்படி கொடுக்கல் வாங்கல்களின் விளைவுகளை பெறுமதியுடன் பின்வரும் கணக்கீட்டு சமன்பாட்டில் பதிவு செய்க.

| இல | சொத்துக்கள் | | | | பொறுப்புக்கள் | | உரிமையாண்மை |
|---|---|---|---|---|---|---|---|
| | ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | சரக்கிருப்புக்கள் | வியாபார வருமதிகள் | காசு | வியாபார கொடுக்குமதிகள் | கடன்கள் | |
| | | | | | | | |


Sajith.SP

(02) 31.03.2021 இல் முடிவடையும் மாதத்திற்கான இலாப நட்டக்கணிப்புகூற்று
(03) கீழே தரப்பட்டுள்ள மாதிரியைப் பயன்படுத்தி 31.03.2021 இல் தேறிய சொத்தின் உள்ளடக்கம்.

| விடயங்கள் | ரூபா "000" |
|---|---|
| ஆரம்ப மூலதனம் | |
| காலப்பகுதிக்கான இலாபம் / (நட்டம்) | |
| கழி : பற்றுக்கள் | |
| 31.03.2021 இல் உள்ளவாறான உரிமையாண்மை | |

மிதுஷா என்பவர் 01.01.2020 இல் காகிதாதிகள் வியாபாரமொன்றை ஆரம்பித்துள்ளார். வியாபாரத்தின் அனைத்து காசு கொடுக்கல் வாங்கல்களும் வங்கி நடைமுறைக்கணக்கினூடாகச் செய்யப்படுகின்றன. மிதுஷா, வியாபாரத்தின் முகாமையாளராகப் பணியாற்றுவதுடன் விற்பனையை மேற்கொள்வதற்கும் இருப்புக்களை பராமரிப்பதற்கும் ஊழியரொருவரை நியமித்துள்ளார்.

ஜனவரி 2020 இல் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் வியாபாரத்தில் இடம்பெற்றுள்ளன.

| இல | திகதி | கொடுக்கல் வாங்கல்கள் |
|---|---|---|
| 1 | 01.01 | மிதுஷா ரூபா 800 000 ஐக் காசாகவும், ரூபா 180 000 பெறுமதியான தளபாடங்களையும் வணிகத்தில் முதலிட கொண்டு வந்தார். |
| 2 | 03.01 | ரூபா 350 000 காகிதாதிகள் காசோலை மூலம் கொள்வனவு செய்யப்பட்டது. |
| 3 | 06.01 | ரூபா 100 000 கிரயமான காகிதாதிகள் ரூபா 150 000 இற்கு காசோலை மூலம் விற்பனை செய்யப்பட்டது. |
| 4 | 09.01 | ரூபா 100 000 கிரயமான காகிதாதிகள் ரூபா 150 000 இற்கு கிஷானுக்கு விற்பனை செய்யப்பட்டது. |
| 5 | 11.01 | ரூபா 400 000 கிரயமான காகிதாதிகள் யசீனா கம்பனியிடம் கொள்வனவு செய்யப்பட்டது. |
| 6 | 12.01 | ரூபா 300 000 கிரயமான காகிதாதிகள் ரூபா 280 000 இற்கு யுவனி நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டது. |
| 7 | 15.01 | ரூபா 300 000 அலுவலக தளபாடங்கள் வங்கிக்கடன் மூலம் கொள்வனவு செய்யப்பட்டது. |
| 8 | 22.01 | செலுத்திய சம்பளங்கள் : மிதுஷா ரூபா 50 000, சுகன்யா ரூபா 30 000 |
| 9 | 25.01 | குறிப்பிட்ட மாதத்திற்காக ஏற்பட்ட காரியாலயச் செலவுகள் ரூபா 40 000 இல் ரூபா 30 000 செலுத்தப்பட்டது. |
| 10 | 28.01 | யுவனியிடம் வரவேண்டிய தொகையானது ரூபா 10 000 கழிவு அனுமதித்து பெறப்பட்டது. |
| 11 | 30.01 | யசீனாவிற்கு ரூபா 380 000 காசோலையொன்று கொடுத்து தீர்க்கப்பட்டு அவரின் கணக்கானது முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. |
| 12 | 31.01 | ரூபா 5 000 கடன்வட்டி உட்பட வங்கிக்கடன் தவணைக்கட்டணமாக ரூபா 55 000 இனை மிதுஷா சொந்தப்பணத்தில் இருந்து செலுத்தினார். |

மேலதிக தகவல்கள் :

- ஆதனம், பொறி மற்றும் உபரணங்களுக்கு நேர்க்கோட்டு முறையில் கிரயத்தில் 20% வருடாந்தம் பெறுமானத்தேய்விடப்படல் வேண்டும்.

**வேண்டப்படுவது :**

**01)** பின்வரும் கணக்கீட்டு சமன்பாட்டை பயன்படுத்தி 1 தொடக்கம் 12 வரையான கொடுக்கல் வாங்கல்களின் தாக்கங்களை பதிவு செய்க.

| இல | சொத்துக்கள் | | | | பொறுப்புக்கள் | | | உரிமையாண்மை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | இருப்பு | வியாபார வருமதிகள் | காசு | வியாபார கொடுக்குமதிகள் | கடன்கள் | ஏனைய கொடுக்குமதி | மூலதனம் | நிறுத்தி வைத்த இலாபம் |
| | | | | | | | | | |

**02)** 2020 மாரச் மாத வருமானக்கூற்று
**03)** 2020 மாரச 31 இல் உள்ளப்படியான நிதிநிலைமைக்கூற்று